| சுபாஜினி பாலநாதன் | - வசாவிளான் |
| சுபாசந்திரபோஸ் பேரின்வதனி | - உடையார்கட்டு |
| சுகரஞ்சனி திருப்பதி | - வல்வெட்டித்துறை |
| சர்வாஜினி சத்சனாமூர்த்தி | - தெல்லிப்பளை |
| சாமினி சுதர்சன் | - கரணவாய் |
| சாமினி ரதீஸ்குமார் | - அளம்பில் |
| சுதனி கந்தையா | - அல்லாரை |
| சுதாகரன் சுகந்தினி | - தெல்லிப்பளை |
| சுமதி சிவகுமார் | - நல்லூர் |
| சுரேஸ் பிரசாந்தி | - திருநெல்வேலி |
| சியாமளா நடராசா | - கொக்குவில் |
| சிவகுமாரி தயாபரன் | - கோப்பாய் |
| சிவசுந்தரம் அருள்மதி | - தண்ணீரூற்று |
| சிவகலா பிரபாகரன் | - உசன் |
| சஞ்சீவன் நிரஞ்சுலா | - புதுக்குடியிருப்பு |
| சசிகரன் ரேனுகா | - முள்ளியவளை |
| சுசித்திரா சிவசுப்பிரமணியம் | - புதுக்குடியிருப்பு |
| சரவணன் வாசுகி | - புலோலி |
| சரவணபவன் சபாலிங்கம் | - புதுக்குடியிருப்பு |
| வாசுகி தம்பிராஜா | - துன்னாலை |
| வதனி பிரேமகோணேஸ்வரன் | - தும்பளை |
| விஜயந்தி சபாரத்தினம் | - கரவெட்டி |
| விஜயகலா திருநாவுக்கரசு | - மட்டுவில் |
| விஜிதா தம்பிப்பிள்ளை | - நல்லூர் |
| விஜிதா பொன்னுச்சாமி | - விசுவமடு |
| வீரசிங்கம் பாஸ்கரன் | - புதுக்குடியிருப்பு |
| வசந்தமாலர் சுப்பிரமணியம் | - சங்கத்தானை |
| வல்லிபுரம் வத்சலா | - முள்ளியவளை |
| லலிதா ஆறுமுகம் | - அல்வாய் |
| லலிதா விக்னேஸ்வரமூர்த்தி | - புலோலி |

### துணுக்காய் வலயம்

| | |
|---|---|
| இரஜீக்கா இராஜன் | - நல்லூர் |
| இராஜேஸ்வரி சந்திரசேகரன் | - கோண்டாவில் |
| உக்ஷநந்தினி குண்டுமணி | - கந்தர்மடம் |
| நந்தினி தியாகராஜா | - மானிப்பாய் |
| நாகலிங்கம் கமலினி | - நவாலி |
| நடராஜா ராஜி | - துணுக்காய் |
| நளாயினி பூபாலசிங்கம் | - கந்தர்மடம் |
| கலைச்செல்வி தில்லைநாயகம் | - தெல்லிப்பளை |
| கவிதா நடராசா | - நட்டாங்கண்டல் |
| கவிதா கதிரமலை | - கோண்டாவில் |
| கவிதா சண்முகநாதன் | - கோண்டாவில் |
| கலாசக்தி நவரட்ணம் | - காரைநகர் |
| பூலோகசிங்கம் சசீதை | - நுணாவில் |
| பகீர்தரன் சுஜாதா | - கொக்குவில் |
| பவானி சபாநாயகன் | - இணுவில் |
| பவித்ரா துரைரட்ணம் | - திருநெல்வேலி |
| துஸ்யந்தி திருநாவுக்கரசு | - தெல்லிப்பளை |
| தில்லையம்பலம் சிவகுமாரி | - அளவெட்டி |
| துரந்தரி நாகராசா | - சுன்னாகம் |

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்.....

# சிவில் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டால் மக்கள் போராட்டங்கள் உருவெடுக்கும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

**சிவில் நடவடிக்கைகளிலும், நலன்புரி முகாம்களின் பராமரிப்பு போன்ற விடயங்களிலும் இராணுவம் ஈடுபடுத்தப்படுமானால், அது மிகப்பெரிய மக்கள் போராட்டங்கள் உருவெடுக்கவே வழிவகுக்கும்.**

**அரசின் செயற்பாட்டைக் கண்டித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிக்கையில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளதாவது -**

கடந்த 26 ஆம் திகதி சுனாமி கொந்தளிப்பால் அனர்த்தத்துக்குள்ளாக்கப்பட்டு, இலங்கையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி வடக்கு - கிழக்கு மற்றும் தென் பகுதியாகும். இதில் மூன்றில் இரண்டு பகுதி தமிழ் பேசும் மக்களின் வடக்கு - கிழக்குக் கரையோரப் பிரதேசம் என்பதுடன், இந்த அனர்த் தத்தால் பலியானதும், பாதிக்கப் பட்டவர்களுமாக வடக்கு - கிழக் கைச்சேர்ந்த தமிழ் மக்களாகவே உள்ளனர். இந்த உணமை அர சாங்கத்துக்கும் தெரிந்த விடயமே.


இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி அவர்களது விடுதலைப் போராட்டத்தைச் சீரழித்து விடுவது என்ற அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் நடத்திய யுத்தத்தில் ஏறத்தாழ 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டும், பலநூறு யுவதிகள் இராணுவத்தாலும், முப்படையாலும் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுமுள்ளனர். இவ்வாறாக இராணுவத்தினர், தமிழ் மக்களின் புனர்வாழ்வு நிலையங்களைப் பராமரிப்பதென்பதும், அதற்கான உணவு மற்றும் பொருட்களைப் பங்கிட்டு அளிக்கும் பொறுப்பை, அரசு இவர்களுக்குக் கொடுத்துள்ளது என்பதும், அரசின் மிக மோசடித்தனமான செயற்பாட்டையே காட்டுகின்றது.

திருகோணமலையில் இராணுவத்தினர் நலன்புரி நிலையங்களுக்குச் சென்றதால், அங்குள்ள மக்கள் நலன்புரி நிலையங்களை விட்டே வெளியேறியுள்ளனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பிய பொருட்களை அம்பாறையில் அதிரடிப்படையினர் பறிமுதல் செய்து, வீதியால் போனோர், வந்தோருக்கு விநியோகம் செய்துள்ளனர். எனவே, இவ்வாறான சூழ்நிலையில் வடக்கு - கிழக்கில் புனருத்தாரண நடவடிக்கையில் இராணுவம் ஈடுபடமுடியாதென்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்- ஜனாதிபதிக்கும், பாதுகாப்புச் செயலாளருக்கும் அறிவித்துள்ளனர்.

அது மாத்திரமல்லாமல் கடந்த மூன்று நாட்களாக அமெரிக்கா, பிரிட்டன், சுவிற்சலாந்து, நோர்வே, கனடா, ஜப்பான், நெதர்லாந்து மற்றும் இந்தியத் தூதவர்களைச் சந்தித்து, அரசாங்கத்தின் இந்த மோசமான நடவடிக்கைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கூறியுள்ளோம். அது மாத்திரமல்லாமல் மிக அதிகமாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசமும், பாதிக்கப்பட்ட மக்களுமாக தமிழ் பேசும் மக்களும், அவர்களது வாழ்விடங்களும் இருப்பதால், சர்வதேச உதவி அவர்களுக்குத் தேவையானளவு சென்றடைய வேண்டும் என்பதையும் கோரியுள்ளோம்.

சர்வதேச உதவிகள் முழுமையாக அரசாங்கத்தினூடு செல்லும் போது, அது மிகப்பெரும் ஊழலை உருவாக்கும் என்பதுடன், அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே இந்தப் பணம் செலவு செய்யப்படும் என்பதையும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

எனவே சர்வதேச தொண்டர் நிறுவனங்கள், உள்ளூர்த் தொண்டு நிறுவனங்களூடாக இந்தப்பணம் செலவு செய்யப்படவேண்டும் என்பதையும், சர்வதேச சமூகம் கொடுக்கும் ஒவ்வொரு சதத்துக்கும், கணக்கிருக்க வேண்டும் என்பதுடன், அது எவ்வாறு செலவு செய்யப்பட்ட வேண்டும் என்ற வெளிப்படைத் தன்மை இருக்கவேண்டும் என்பதையும் கோரியுள்ளோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அண்மையில் நடைபெற்ற கைதடி அரச சிறுவர் இல்லப்பிள்ளைகளுக்கான சேமிப்புக்கணக்குப் புத்தகம் வழங்கும் நிகழ்வில் - தென்மராட்சிப் பிரதேச செயலர் வங்கிக் கணக்குப் புத்தகத்தை சிறுமி ஒருவருக்கு வழங்குதைப் படத்தில் காணலாம். (110)




இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்ட நாவலர் விழாவுக்கு, சைவப்பிரசாரகர் கௌரவிப்பு நிகழ்வுக்கு தலைமை வகித்த இந்து சமய கலாசார அலுவலர்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சி.மகாலிங்கம் தலைமையுரை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் குடும்பங்களை தொடர்புகொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி நிறுவனங்கள், அனைத்துப் பல்கலைக்கழகங்கள், உயர் தொழில் நுட்பக் கல்லூரி, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி, கல்வியற் கல்லூரி மற்றும் ஏனைய நிறுவ னங்களைச் சேர்ந்த மாணவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தால், உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு தமிழீழ மாணவர் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் -

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு, உறவுகளை இழந்து, காயப்பட்டு அல்லலுறும் எம் இனிய மக்கள் அனைவருக்கும் அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும், இந்தக் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களின் குடும்பங்களின் கல்வித் தேவைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# நலன்புரி நிலையங்களில் இருப்போரை பாதுகாவலர் சங்கம் சந்திக்கவுள்ளது

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை - இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் இன்று சந்திக்கவுள்ளனர்.

உறவுகளை இழந்து உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட இவர்களைச் சந்தித்து, ஆறுதல் கூறுவதுடன், அன்பளிப்புப் பொருட்களையும் வழங்கவுள்ளனர். பொது அமைப்புகளின் ஒன்றிய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (91)

# உடுவில் பிரதேச செயலகத்தில் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல்

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தில் இந்த ஆண்டுக்கான வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அலுவலக நாட்களில் தினமும் காலை 9.30 மணியிலிருந்து 12.30 மணிவரைக்குள் வாகனப் பதிவுப் புத்தகம், முடிவடைந்த வாகனவரிப் பத்திரம், நடைமுறையிலுள்ள காப்புறுதிச் சான்றிதழ், பிரயாணிகள் சேவை வழி அனுமதிப்பத்திரம், அடையாள அட்டை, குடும்ப அட்டை, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் என்பனவற்றைச் சமர்ப்பித்து வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (101)

# தையல் கூலி வழங்கப்படவில்லை; வைத்தியசாலை ஊழியர்கள் விசனம்

(மந்திகை)

மந்திகை வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சீருடை தைப்பதற்கான துணி சென்ற ஆண்டு வழங்கப்படவில்லை எனவும், கடந்த நான்கு வருடங்களாக சீருடை தைப்பதற்கான தையல் கூலிகள் வழங்கப்படவில்லை எனவும் மந்திகை வைத்தியசாலை ஊழியர்கள தெரிவித்தனர்.

தற்போது தையல் கூலிகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றமையால் அதற்கான கொடுப்பனவுகளை வழங்குமாறு மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திய போதும், அவர் கள் அது பற்றிக் கவனம் எடுக்காம லிருப்பதால் ஊழியர்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலை ஊழியர்கள் எவருக்கும் இந்தச் சலுவை வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். (12)

# குடாநாட்டில் அரிசியைக் கொள்வனவு செய்து விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மக்களுக்கு விநியோகிக்கவென, குடாநாட்டுக்குள்ளேயே ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வளவு தொன் அரிசியைக் கொள்வனவு செய்வதற்கு யாழ். அரசாங்க அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவை ஆணையாளரும், சட்டமும் - ஒழுங்கும் அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற தேசிய நடவடிக்கை மத்திய நிலையத்தின் கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்ற அரிசியில் 60 தொன் அரிசி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பிரதேசங்களிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூதறிஞர் சொக்கன் நினைவுச்சிமிழ்

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் அமரர் கலாநிதி சொக்கலிங்கத்தின் நினைவுச்சிமிழ் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அஞ்சலி உரைகளும் "சொக்கன் சிறுகதை" நூல் வெளியீடும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## உடுவில் பிரதேச செயலர் மேலதிக கடமையில்

பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவில் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பை அடுத்து, இந்தப் பிரதேச கட்டுமாணப் பணிக்கு உதவும் முகமாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதியும், உடுவில் பிரதேச செயலாளர் திருவாகரன் பருத்தித்துறை பிரதேச செயலாளருடன் இணைந்து மேலதிகமாகக் கடமையாற்றவுள்ளார்.

இதேவேளை முன்னர் மருதங்கேணி பிரதேச செயலாளர் சிவபுண்ணியம் - மணற்காடு, குடத்தனை ஆகிய கிராமங்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட ஐந்து கிராமங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக கடமையாற்றவுள்ளார்.

## வேலைக்குச் சென்றிருந்த இளைஞரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவரைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அழகரட்ணம் கவின் (வயது 25) எனும் இளைஞரே காணாமற்போயுள்ளார்.

அக்கராயன் - கிளிநொச்சியில் தொழில்புரியும் இவர், வழமை போல தொழிலுக்காக கடந்த 3 ஆம் திகதி கிளிநொச்சி சென்ற பின், காணாமற்போயுள்ளதாக இவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிட்டுள்ளார்.

## சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களும் உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென - காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களால் சேரிக்கப்பட்ட சவர்க்காரம், உடுபுடைவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பன நேற்று முன்தினம் அவர்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டன.

இந்தப் பொருட்கள் புலோலி மெதடிஸ்தமிசன் பாடசாலை நலன்புரி நிலையத்திலுள்ள 176 குடும்பங்களுக்கும், வேளாங்கன்னி நடுக்குள முகாமிலுள்ள 135 குடும்பங்களுக்கும் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பதிகாரி ஆ.ஜெயபாலச்சந்திரனால் வழங்கப்பட்டது. (12)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : செல்வராஜ் தமிழ்
முகவரி : வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்



விளையாட்டு அரங்கம்

# கண்ணீரின் சுவடுகளின் கனவுகளின் ஊர்வலமாய் பொன்வனத்துப் புதுப்பூக்கள் புதைந்தழிய விடுவோமா?

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி மனிதகுலத் தையே உலுக்கிவிட்ட சுனாமி என்ற பெயர் கொண்ட கடற்கொந்தளிப்பு கோரத் தாண்ட வத்தை ஆடி முடித்தது. தென்னாசியா, தென்கிழக் காசியா பிராந்தியத்தின் சில நாடுகளைப் பெரிதும் பாதித்த சுனாமி தொலை தூரத்தில் ஆபிரிக்கக் கண்டத்தின் கிழக்குக்கரை நாடுகளான கென்யா, எதியோப்பியா, சோமாலியா, செசெல்ஸ் தீவுக ளையும் விட்டு வைக்காது மெதுவாகவேனும் ஒரு அறை அறைந்தது.

ஒருதரவின்படி பதின்மூன்று நாடுக ளைச் சேர்ந்த ஒரு லட்சத்து இருபத்தையா யிரம் மக்களைப் பலி கொண்டு ஒரு மில்லியன் மக்களை இருப்பிடம் இல்லாதவர்களாக்கி ஐந்து மில்லியன் மக்களை அடிப்படை வசதிகள் எது வுமே இல்லாதவர்கள் ஆக்கியுள்ளது. இந்த நிலையில் விளையாட்டு உலகமும் இந்தத் துயரத்தில் தானும் பங்கு கொண்டு துன்பத்திலாழ்ந்தவர்களின் துன்பத்தில் பங்கு கொள் வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.




இங்கிலீஷ் பிரிமியர் லீக் இங்கிலாந்தின் அதிஉயர்தகைமை கொண்ட இருபது உதைபந்தாட்டக் கழ கங்களைத் தன்ன கத்தே கொண்டது. அவர்கள் இருபது லட் சம் அமெரிக்க டொலர் களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுத் துதவத் தீர்மானித்துள் ளார்கள். இதில் பிரசித் தம் வாய்ந்த கழகங்களான மன்செஸ்ரர் யுனைட்டட், ஆர்சனல் மற்றும் செல்சீ கழகங்கள் தலா 50,000 பவுண்ட்களைக் கொடுக்க விருப்பம் தெரிவித்துள்ளன.

ரஷ்ய நாட்டின் ரெனிஸ் நட்சத்திரம் மரியா ஷரபோவா தாய்லாந்துப் பிரதமரிடம் 10,000 அமெரிக்க டொலர்களைக் கையளித்துள்ளார். இலங்கைப் பணப்பெறுமதியில் பத்து லட்சம் ரூபா. தொழில்சார் ஆண்கள் ரெனிஸ் சம்மேளனமான ATP சென்னையில் நடைபெறவிருக்கும் ஓபன் ரெனிஸ் போட்டிகளை நிதி சேகரிக்கும் நிகழ்ச்சிகளாக மாற்ற உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. இதே வேளை, வீரர்களின் பரிசுப் பணத்தையும் நிவாரண நிதியில் சேர்க்கப் பலரும் சம்மதம் தெரிவித்துள்ளனர். முன்னாள் தரவரிசை ஒன்றினைக் கொண்டிருந்த கார்லோஸ் மோயாவின் மேலங்கி , மற்றும் வீரர்களின் கையெழுத்து அடங்கிய பல்வேறு பொருட்கள் ஏலத்தில் விடப்படவும் உள்ளன.

அதேவேளை, சர்வதேச றகர் சம்மேளனம் (IRB) உலக றகர் சம்மேளனங்களை ஒருங்கிணைத்து ஐ.நா. சபை உலக உணவுத் திட்ட அமைப்பிடம் தனது நிவாரண நிதியை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கிரிக்கெட் உலகம் தன் பங்குக்கு சில நடவடிக்கைகளை எடுக்க முனைந்துள்ளது. ICC யின் திட்டப்படி ஆசிய அணிக்கும் உலக அணிக்கும் இடையிலான நிதிசேகரிப்பு ஆட்டமொன்றை நடத்த உத்தேசித்துள்ளது. ஆனால், நொந்துபோயுள்ள ஆசிய நாடுகளில் இருந்தே வீரர்களைத் தெரிவு செய்து ஒரு ஆட்டத்துக்குத் தயாராகுங்கள் என்று கேட்டுக் கொள்வது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற ஒரு செயலாகவே இருக்கும். மேலும் ஒரு ஆட் டத்தை அவுஸ்ரேலியாவிலும், இன்னொரு ஆட்டத்தை ஆசிய கிரிக்கெட் நாடொன்றிலும் நடத்துவதற்கு எண்ணுவதாகவும் ஒரு கதை அடிபடுகிறது. இது அடுத்த இடியாகும். நிதி சேகரிக்க எடுக்கும் முயற்சி மனங்கொள்ளத்தக் கது. ஆனால், பின்பற்றவிருப்ப தாகக் கூறப்படும் நடைமுறைகள் மிகுந்த துன்பத்தை அளிக்கின்றன.

இந்த வகையில் இலங்கை அணி நியூசிலாந்துத் தொடரை ரத்து செய்துவிட்டு மீண்டும் தாயகம் திரும்பியது நிச்சயம் பாராட்டப்பட வேண்டியது. எனவே, ஆசிய நாடொன்றில் ஆட்டம் போடுவதைவிடுத்து, இங்கிலாந்தில் நடத்துவதே கூடிய பொருத்தமாக இருக்கும். கனடா, ஐக்கிய அமெரிக்கா கூட இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை வரவேற்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், உடனடியாக ஒரு ஆட்டத்தை ஒழுங்கு பண்ணும் சாத்தியம் இங்கி லாந்திலேயே அதிகம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே.




துறைமுக அலைகள் (TSUNAMI) என்ற பெயருடன் ஊழித்தாண்டவம் ஆடிய சமுத்திரா தேவியின் தாக்கத்தில் இருந்து தப்பிய, ஆனால் அல்லலுற்ற மக்களை மீண்டும் தம் பாதங்களை தைரியத்துடன் முன்னோக்கி எடுத்து வைக்க உதவ விளையாட்டுலகம் எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெறவேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை உடல், உள (Infra Structure) போன்ற பல்வேறு துறைகள் வெற்றிபெற்றால் தான் சுனாமியிடம் மனித குலம் முற்றாகத் தோற்றுப் போய்விடவில்லை என்பது உறுதிப்படும்.





ஆனால், சுனாமி அலைகள் ஒருவகையில் தோற்றுத்தான் போய்விட்டது. வன்னிப் பிராந்தியத்தில் இருந்து அந்த நாட்களில் கிடைத்த ஒரு செய்தியின்படி ஒரு தாயின் சடலத்தை மீட்டெடுத்தபோது, அவள் தனது சிசுவை அணைத்தபடியே கிடந்ததைக் காண முடிந்தது என்றவர் கதறி அழுது விட்டார். இன்னொரு சம்பவத்தில் திருமலை மாவட்டத்தில் இருந்து தொலைக்காட்சிக்கு தொலை பேசியில் அவலங்களைக் கூறிக்கொண்டிருந்தவர், இறுக்கமான அரவணைப்பில் இருந்த இரண்டே மாதங்களான உயிரிழந்த சிசுவுடன் கூடிய தாயின் சடல மொன்றைக் காணமுடிந்தது என்று மிகுந்த துயரத்துடன் கூறினார். இந்த வகையில் அந்தப் பிஞ்சுகளின் உயிரைப் பறிக்க சுனாமியால் முடிந்திருந்தது. ஆனால், ஐந்நூறு மைல்கள் அல்லது எண்ணூறு கிலோமீற்றர் வேகத்தில் எத்தனையோ கனரகவாகனங்கள், கட்டடங்கள் சிதைத்தெறிந்த சுனாமியால் தாயின் அணைப்பில் இருந்த சிசுவைப் பிரிக்க முடியவேயில்லை. மகத்தான தாய்மையின் முன்னால் சுனாமி தோற்றுத்தான் போய்விட்டது.

நன்றி: கவிதைகள் - கவிஞர் வைரமுத்து

–ஜோசப் கிருஷ்ணா–

# அர்த்தங்கள் ஆயிரம்

கடந்த வருட Boxing Dayஇல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நான்கு ஆரம்பித்தன. ஒன்று அவுஸ்ரேலிய –பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி- அவுஸ்ரேலிய மெல் பேர்ன் (MCG) கிரிக்கெட் அரங்கில். அடுத்தது இங்கிலாந்து- தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் ஆரம்பித்தது. அதேபோல பங்களாதேஷின் டாக்கா நகரில் இந்திய - பங்களாதேஷ் ஒருநாள் போட்டியும், நியூசிலாந்தின் ஆக்லண்ட் நகரில் இலங்கை- நியூஸிலாந்து ஒருநாள் ஆட்டமும் நடைபெற்றன. இந்த ஆட்டங்கள் எல்லாம் மேற்குறித்தவாறு, Boxing Day இல் அதாவது கிறிஸ் மஸ் தினத்துக்கு மறுதினம் ஆரம்பித்தன என்று சிறப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டது. அதுவும் அந்த நாளுக்கு உரிய சிறப்புப் பெயர் கிறிஸ்தவ உலகில் கூடுதலான அர்த்தம் பொதிந்ததாக இருக்கும் என்பதும் உண்மை.



அவுஸ்ரேலிய நாட்டைப் பொறுத்தவரை MCGயில் டிசம்பர் 26ம் திகதி டெஸ்ட் போட்டியொன்று நடைபெறுவது 1968/69ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்தது. இந்த ஆட்டத்தில் அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் அணியை ஒரு இனிங்சால் தோற் கடித்தது. Boxing முறையில் குத்துவாங்கி மேற்கிந்தியத் தீவுகள் அணி சரிந்ததுபோல இருக்கிறதல்லவா. அதன்பின் 1974/75இல் அவுஸ்ரேலிய –இங்கிலாந்து டெஸ்ட் போட்டியொன்று விறுவிறுப்பான முறையில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இருந்தாலும் 1981/82 அவுஸ்ரேலிய- மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான ஆட்டத்தின் பின் MCG யில் Boxing Day Test ஆட்டம் நடைபெறுவது ஒரு சம்பிரதாயமா கவே மாறிவிட்டது. இந்த வரிசையில் MCG மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றிலேயே அவுஸ்ரே லிய நடுவர் டரல் ஹெயர் முரளிதரனின் பந்துவீச்சு முறையற்றது என்று கூறி No Ball சமிக்ஞை செய்த சம்பவமும் நடந்தது.

இப்படியாக Boxing Day Test என்பதும் ஒரு தனித்துவமான டெஸ்ட் போட்டியாக அவுஸ்ரேலியாவில் உருவாகி வருகிறது. அதுசரி இந்த Boxing Day என்றால் என்ன? Chambers Dictionary பின்வருமாறு விளக்கம் தருகிறது. THE DAY AFTER CHRI STMAS, WHEN BOXES OR PRESENTS WERE TRADITIONALLY GIVEN TO EMPLOYEES, ETC. கிறிஸ்மஸ் தினமான 25ஆம் திகதியை அடுத்து வரும் 26ஆம் திகதி ஊழியர்களுக்கும் பல்தரப்பா ருக்கும் பெட்டிகளில், சிறு பொதிகளில் (Boxes) பரிசில் களைப் பாரம்பரியமாக வழங்கும் நாள் என்று பொருள் கொள்ளலாம். Boxing Dayக்கு “Did you know'' இணைய தளம் தருகின்ற விளக்கம் இப்படிப்போகிறது. உதவி வேண்டி நிற்போருக்கு உதவும்முகமாக தேவாலயத்துக்குச் செல்வோர் உண்டியலில் காசுகளைப் போட்டு வருவார்கள். அப்படிச் சேர்ந்த பணத்தைக் கொண்டு கிறிஸ்மஸ் தினத்துக்கு மறுநாள் அதாவது 26ஆம் திகதி ஏழை எளியோருக்குப் பரிசில்கள், பொதிகள் வாங்கிக் கொடுப்பார்கள். இதுவே Boxing Day எனப் பெயர் பெற்றது. ஆகவே தற்போது, இதுவரை கூறப்பட்ட அந்த நாளுக்கும், குத்துச் சண்டைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை ரசிகர்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பார்கள்.

–செந்தூரன் –

# தவிர்க்க முடியாத உண்மைகள்



டேர்பனில் நடைபெற்ற இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டை சமநிலையாக்கியதன் மூலம் இங்கிலாந்து அணியின் தொடர்வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது தென்னாபிரிக்க அணி.

378 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி இறுதி நாளன்று எட்டு விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, போதிய வெளிச்சமின்மையைக் காரணம் காட்டிப் போட்டியை நடுவர்கள் முன்னதாகவே முடித்ததனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

அன்றையதினம் முடிவதற்கு 15 ஓவர்கள் முன்னதாகவே போட்டியை முடித்ததனால் இங்கிலாந்து வீரர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஏனென்றால் தொடர்ச்சியாக 8 டெஸ்ட் வெற்றிகளைப் பெற்று 9 ஆவது வெற்றிக்குக் காத்திருந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான ஒரு முடிவைக் கட்டாயம் அவர்கள் விரும்பமாட்டார்கள். அதனால் ஒருநாள் போட்டிகளில் 50 ஓவர்கள் மின்னொளியில் விளையாடப்படுவதைப்போன்று, எஞ்சிய 15 ஓவர்களையும் விளையாடுவதற்கு அனுமதிகோரி நடுவர்களிடம் கோரிக்கை விடுத்தனர். ஆனால் நடுவர்கள் சற்றும் அதற்குச் செவி சாய்க்கவில்லை.

இந்தப் போட்டி முடிவு தங்களுக்குப் பாதகமாக இருந்தாலும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது அவசியமென இங்கிலாந்து அணி வீரர்கள் பலரும் இது குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இந்தப் போட்டியில் நடுவர்கள் மனம் வைத்திருந்தால் இங்கிலாந்து வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருந்திருக்கும். எஞ்சிய 15 ஓவர்களில் இறுதிநேரப் பதற்றத்திலே தென்னாபிரிக்க அணியின் இரு TAIL ENDERS களையும் ஆட்டமிழக்கச் செய்வது அவர்களுக்குக் கடினமாக இருந்திருக்காது.

2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நஸார் ஹுசைன் தலைமையிலான இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தது. அப்போது பெங்களூரில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் வெளிச்சம் போதாமையால் மின்னொளியில் சில ஓவர்கள் விளையாடப்பட்டது. இதுவே மின்னொளியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியாகவும் கிரிக்கெட் வரலாற்றுப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

அவ்வாறே இங்கிலாந்து – தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இந்தப் போட்டியிலும், எஞ்சிய ஓவர்களை மின்னொளியில் விளையாட அவுஸ்ரேலிய நடுவர்களான, சைமன் ரபெலும், டரெல் ஹெயரும் அனுமதித்திருக்கலாம்.

ஆனால், சந்தர்ப்பம் பார்த்துக் குழிபறிப்பதில் வல்லவர்களான அவுஸ்ரேலியர்கள், ஸ்ரீவ்வோ தலைமையிலான அவுஸ்ரேலிய அணி டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாகப்பெற்ற 16 டெஸ்ட் போட்டிகளுக்கு எங்கே வில்லங்கம் வந்துவிடுமோ என்ற பயத்திலோ தெரியவில்லை, இங்கிலாந்தின் எட்டாவது தொடர் வெற்றியுடனேயே அதற்கு சமாதி கட்டிவிட்டனர்.

எனினும் 16 வெற்றிகளைப்பெற்ற அவுஸ்ரேலியர்கள் இந்திய அணிக்கு FOLLOW - ON கொடுத்தும் படுதோல்வி அடைந்து தொடர் வெற்றியைப் பறிகொடுத்தது போலல்லாமல், இங்கிலாந்து அணியினர் நடுவர்களால் தொடர்வெற்றியை இழக்க நேரிட்டது ஒன்றும் இளக்காரமல்ல.

டெஸ்ட் போட்டியொன்றில் மழை காரணமாகவோ அல்லது போதிய வெளிச்சமின்மை காரணமாகவோ போட்டிகள் இடைநிறுத்தப்பட்டால், அடுத்தநாள் போட்டியை அரைமணித்தியாலமோ அல்லது ஒரு மணித்தியாலமோ முந்தித் தொடங்கி அதை ஈடுசெய்வதைப்போன்று, ஆட்டத்தின் முடிவொன்று நிச்சயமானது என எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் இழக்கப்படவிருக்கின்ற நேரத்தை அல்லது ஓவர்களை பூர்த்திசெய்யும் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். 1999 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளில் இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து வெற்றி இலக்கை நோக்கி ஆடிக்கொண்டிருந்தபோது தோல்வியைத் தழுவும் ஒரு சந்தர்ப்பத்தில் மழை குறுக்கிட்டது. அதனால் அன்று அந்த ஆட்டத்தை இடைநிறுத்தி மறுநாள் விட்ட இடத்திலேயே இருந்து நடுவர்கள் ஆட்டத்தைத் தொடர்ந்து நடத்தியதால் இந்தியா அந்தப் போட்டியில் வெற்றிபெற்றது.

எனவே ஒருநாள் போட்டிகளில் கடைப்பிடிக்கப்படும் இதுபோன்ற முறைகளை டெஸ்ட் போட்டியிலும் அறிமுகப்படுத்தலாம்.

ஏனென்றால் கடந்த ஒக்ரோபர் மாதம் இந்திய – அவுஸ்ரேலிய அணிகளிடையே சென்னையில் நடைபெற்ற டெஸ்டில், ஐந்தாம்நாள் 229 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்கு இந்தியாவுக்கு நிர்ணயிக்கப்பட்டது. அந்தப் போட்டியில் இந்தியா வெல்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருந்தபோதும் அன்றுபெய்த மழையால் ஆட்டம் கைவிடப்பட்டு போட்டி சமநிலையில் முடிவடைந்ததும் இங்கு மனம் கொள்ளத்தக்கது.

எனவே இரு அணித் தலைவர்களும், கதைத்துப்பேசிப் போட்டியைச் சமநிலையில் முடிவடைவதற்குச் சம்மதிக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் இறுதிநாள் ஆட்டத்தில் வெற்றி தோல்வியை அறியக்கூடிய போட்டிகளில் ஆட்டம் மழையாலோ அல்லது வெளிச்சமின்மையாலோ பாதிக்கப்பட்டால், போட்டியை அடுத்தநாள் தொடர்ந்து நடத்துவதற்கோ அல்லது மின்னொளியில் தொடர்ந்து விளையாடுவதற்கோ ICC அனுமதித்தால் அது கிரிக்கெட்டை மேலும் வளர்ச்சியடையவே செய்யும். இதன் சாதகத் தன்மையை ICC புரிந்து கொள்ளுமா?

*–விமலன்.*

# கையை விடுங்கப்பா

பந்து வீச்சு முறைமைப் பிறழ்வு தொடர்பாக இறுதியாக சுட்டிக்காட்டப்பட்டிருப்பவர் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங். I.C.C இது தொடர்பில் கருத்துக் கூறும் போது மைதான நடுவர்கள் அலீம் தார் (பாகிஸ்தான்) மார்க்பென்சன் (இங்கிலாந்து) மூன்றாவது நடுவர் மஃபூர் ரஹ்மான் (பங்களாதேஷ்) ஆகியோரும் ஆட்ட மத்தியஸ்தர் கிறிஸ் புரோட் (இங்கிலாந்து ) முன் அவதானத்தை உறுதி செய்துள்ளதாகத் தெரிவிக்கிறது.

இன்றைய நவீன தொழில் நுட்ப வளர்ச்சி வேகத்துக்கேற்ப விளையாட்டு வீரர்களும் புதிய புதிய பாணிகளைக் கண்டுபிடிக்க முயல்கிறார்கள். அதில் வெற்றியும் காண்கிறார்கள். அப்படி ஒரு புதுமையைக் காட்ட முனையும் போது அதன் சாதக பாதகங்கள் தொடர்பான பகுப்பாய்வுக்கும் உட்படுகின்றார்கள். இந்த நிலைமையைத்தான் முன்னதாக இலங்கையின் முதற்தர சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனும் தற்போது இந்தியா வின் ஹர்பஜன் சிங்கும் எதிர்கொண்டிருக்கிறார்கள்.



ஹர்பஜன் சிங்
இன்னொரு சோதனை

இந்த நிலையில் I.C.C யும் ஒரு தடுமாற்றத்துக்குள்ளான நிலையில் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதாவது முறைதவறும் பந்து வீச்சு முறைமைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க I.C.C தயாராகவே இருக்கிறது. ஆனால் அந்த எல்லை எது என்று தெரியாத ஒரு திரிசங்கு சொர்க்க நிலையில் அது காணப்படுகிறது.

சுனில் கவாஸ்கர் தலைமையில் அமைக்கப்பட்ட முன்னாள் டெஸ்ட் வீரர்களின் குழுவொன்று பந்துவீச்சாளர்கள் பதினைந்து பாகை வரையில் தம் கைகளை நேராக்கிப் பந்து வீசலாம் என்று அனுமதி கொடுத்துள்ளது. இருந்தும் பந்து வீச்சின் வகைகளுக்கேற்ப பாகையின் அளவு சிறிது வேறுபடலாம் என்றும் கூறியிருந்தது. அதன்படி சுழற்பந்துவீச்சாளர்கள் ஐந்து பாகைகளிலும் மிதவேகப் பந்து வீச்சாளர்கள் ஏழரைப் பாகை மற்றும் வேகப் பந்து வீச்சாளர்கள் பத்துப் பாகைவரையும் செல்லலாம் என்றும் கூறியிருந்தது. இந்த முன்மொழிவுகள் எதிர்வரும் I.C.C யின் நிறைவேற்றுக் குழுவின் சந்திப்பு மெல்பேர்ன் நகரில் நடைபெறும் போது முன்வைக்கப்படும். இந்த முன்மொழிவுகள் ஏற்கப்படுமாயின் முறையற்ற பந்து வீச்சென்ற ஒன்றுக்கு இடம் இல்லாமலே போய்விடும். ஏன் இன்னும் நீண்டகாலத்தின் பின் அமெரிக்க பேஸ் போல் பாணியில் பந்து வீச்சை ரசிகர்கள் பார்க்கும் காலம் வந்தாலும் வரும் என்று கூறுவது ஒன்றும் பெரிய தப்பாகிவிடாது.

– மக்டலின்.

# நல்ல பேரை வாங்கும் பிள்ளை

இங்கிலாந்தின் ஒப்சேவர் சஞ்சிகை 2004 இல் தான் தெரிவு செய்த முதன்மையானவர்களின் பட்டிய லில் பிரான்ஸ் நாட்டு, வீரரும் ஆர்சனல் கழகத்தின் அங்கத்தவருமான தியரி ஹென்றியையும் உள்ளடக்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. ஸ்பானிய தேசிய அணியின் பயிற்றுனர் லூயிஸ் அரகோன்ஸ் தியரி ஹென்றியின் மீது இனரீதியான அவமானத்தை ஏற்படுத்திய போதும் இங்கிலாந்து அவரை உயர்வா கவே மதிக்கிறது. இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட உதைபந்தாட்ட நட்சத்திரங்களே ஆங்கில மொழி பேசுவதில் தடுமாற பிரான்சில் இருந்து வந்துள்ள அவரின் ஆங்கிலப் புலமை பத்திரிகையில் குறிப் பிட்டுக்காட்டப்படுகிறது. முன்னர் ஏற்பட்ட இனவாத அவதூறை அவர் ஒரு கண்ணியவானாக சமாளித்துக் கொண்டதையும் விதந்துரைக்கிறது.




ஐம்பது வருடங்களாக இங்கிலாந்தின் அதி சிறந்த வீரர் விருது வழங்கப்பட்டு வரு கிறது. கடந்த இரு வருடங்களாக இவ்வி ருதைத் தட்டிச் சென்றவர் இவரே. நடந்து முடிந்த பிரீமியர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் எந்தவொரு அணியிடமும் தோல்வியுறாது கிண்ணத்தைத் தட்டிச் சென் றது ஆர்சனல் அணி. இது நூற்றுப்பதினைந்து வருடங்களின் பின் ஏற்பட்டதொரு சாதனை. இந்தச் சுற்றுப் போட்டியில் தியரி ஹென்றி போட்ட கோல்கள் முப்பது. உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரர் விருது கடந்த இரண்டு வருடங்களிலும் இவரை இரண்டாம் இடத்துக்குத் தள்ளி விட்டாலும் இவரது முதன்மைக்குக் குறை வில்லை.

ஆர்சனல் கழக வரலாற்றில் அதிகூடுதலாக இயன் றைட் அடித்த நூற்று இருபத்தெட்டு கோல்களே சாதனையில் இருந்தது. புல்ஹாம் நியூகாசில் யுனைட்டட், சார்ல்ரன் அத்லடிக் மற்றும் மான்செஸ்ரர் யுனைட்டட் அணியு டன் ஆர்சனல் அணி விளையாடவுள்ள நான்கு போட்டிகளிலும் விளையாடும் ஹென்றி, தற்போதைய நூற்று இருபத்தேழு கோல்களையும் கடந்து இயன்றைட்டின் சாதனையை இலகுவாக முறியடிப்பார் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. தியரி ஹென்றி இன்று உலகின் BEST ALL ROUND STRIKER என்ற பெயரைப் பெற்றுக் கொண்டிருப்பவர். இங்கிலாந்தின் ஒப்சேவர் பத்திரிகை அவரது உதைபந்தாட்ட வீச்சுக்களையும் அலசி, அதற்கு மேலாக அவரது கற்றல் ஆர்வம், அவமானங்களையும் புன்சிரிப்புடன் ஏற்று சாதனைகள் மூலம் உயர்ந்து நிற்பதை முதன்மைப்படுத்துவதில் இருந்து தியரி ஹென்றி வித்தி யாசமான மனிதனாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் பத்திரிகைகளிடம் இருந்து நல்லவன் என்ற பெயர் பெறுவதென்பதே ஒரு நட்சத்திர அடையம் தான்.

– நிர்மலன்.

### FIFA உலக உன்னத வீரர்கள்

1991 – லொதர் மத்தாயஸ் (ஜேர்மனி) இன்ரர் மிலான்
1992 – மார்கோ வென் பஸ்ரன் (நெதர்லாந்து) AC மிலான்
1993 – றொபேர்ட்டோ பாகியோ (இத்தாலி) ஜுவென்ரஸ்
1994 – றொமாரியோ (பிரேசில்) பார்சலோனா
1995 – ஜோர்ஜ்வே (லைபீரியர்) AC மிலான்
1996 – றொனால்டோ (பிரேசில்) பார்சலோனா
1997 – றொனால்டோ (பிரேசில்) இன்ரர் மிலான்
1998 – சினேடின் சிடானே (பிரான்ஸ்) ஜுவென்ரஸ்
1999 – றிவால்டோ (பிரேசில்) பார்சலோனா
2000 – சினேடின் சிடானே (பிரான்ஸ்) ஜுவென்ரஸ்
2001 – லூயிஸ் பிஃகோ (போர்த்துக்கல்) ரியல் மட்ரிட்
2002 – றொனால்டோ (பிரேசில்) ரியல் மட்ரிட்
2003 – சினேடின் சிடானே (பிரான்ஸ்) ரியல் மட்ரிட்
2004 – றொனால்டின் ஹோ (பிரேசில்) பார்சலோனோ

**விளையாட்டு அரங்கம்**

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com





# முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட உணவுப்பொருட்களுடன் பௌத்தபிக்குமார் விஜயம்!

(முல்லைத்தீவு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு வழங்க வென ஒருதொகுதி உணவுப் பொருட்களுடன் பௌத்த பிக்குகள் அடங்கிய குழு - இன்று வன்னிக்குச் செல்ல திட்டமிட்டுள்ளனர்.

வன்னி சமாதானக் குழுவின் தலைவரும், வவுனியா விகாராதி பதியுமான வணக்கத்திற்குரிய சீயம்பலகஸ்வெவ விமலசார தேரோ தலைமையில் செல்லும் இந்தக் குழுவில் - 25 இற்கு மேற்பட்ட தென்னிலங்கை பௌத்த பிக்குக ளும் வவுனியாவில் உள்ள இந்து மதகுருமார்களும் இணைந்து செல்லவுள்ளனர்.

அத்தியாவசிய உணவுப் பொருட் கள் உட்பட சுமார் மூன்று இலட் சம் ரூபாய் பெறுமதியான பொருட் களை தாம் சேகரித்துள்ளதாக வவுனியா விகாராதிபதி தெரிவித் தார்.

நேரடியாக அந்த மக்களுக்கு வழங்கவே தாம் வன்னிக்கு விஜ யம் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசமான முல்லைத் தீவுக்கு பௌத்த பிக்குமார் குழு செல்வதற்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் செய் துள்ளார்.

அங்கு பயணம் செய்யும் பௌத்த பிக்குகள் - பாதிக்கப் பட்ட பிரதேசங்களையும் பார்வை யிடுவர் எனத் தெரியவருகின்றது.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# அரச சொத்துக்களுக்கான சேதம் 625 மில்லியன் ரூபாவென மதிப்பீடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் அனர்த்தம் காரணமாக அர சாங்க சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் 625 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது என முல்லைத் தீவு அரசாங்க அதிபர் மேரி இமல்டா சுகுமார் தெரிவித்தார்.

இவர் ஜனாதிபதி செயலகத் துக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த அறிக்கையில் தெரி வித்துள்ளதாவது -

பொறியியலாளர்களையும் திணைக்கள தலைவர்களையும் கொண்டு மதிப்பீடுகள் நடத்தப்பட்ட தில் - 38 கிராமங்கள் முற்றாக இந்த அனர்த்தத்தால் சேதமடைந் துள்ளன.

இதன் காரணமாக 5 ஆயிரத்து 484 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 128 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர். 23 நலன்புரி நிலையங் கள் திறக்கப்பட்டுள்ளது. 800 மாணவர்கள் வரை பலியாகி யுள்ளனர். 16 இந்துக் ஆலயங் களும், 13 தேவாலயங்களும், ஒரு பள்ளிவாசலும் சேதமடைந் துள் ளன. சில இந்துக் கோவிலகளும் தேவாலயங்களும் கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

14 பாடசாலைகள் அழிக்கப் பட்டுள்ளன. 2 ஆயிரத்து 590 பேர் காயமடைந்தும், ஆயிரத்து 68 பேர் காணாமற்போயும் உள்ளனர். எட்டு அரச ஊழியர்கள் உட்பட ஆயிரத்து 932 பேர் பலியாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 3 ஆயி ரத்து 400 வீடுகள் முற்றாகவே சேதமடைந்துள்ளன. 600 வீடுகளில் ஒரு பகுதி மட்டும் சேதமடைந் துள்ளன.

இதனை விட ஏழு பாலங்க ளும் முற்றாக சேதமடைந்துள்ளன என அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

# எதிர்காலத்தை கருத்தில் கொண்டே அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும்

## கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை



கடல் அனர்த்தத்தால் இடம்பெற்ற அழிவுகளை சீர்படுத்துவதுடன் மட்டு மல்லாது, எதிர்காலத்தை யும் கருத்தில் கொண்டே அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண் டும் என கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

முல்லைத்தீவு நகரை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்களில் சிக்காத வண்ணம் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்திற்கு அப்பால் குடியிருப்புகளை அமைக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரையில் கடற்பகுதிக்குள்தான் இந்த நகரம் அமைந்துள்ளதால், இயற்கையாகவே சில இயல்புகளைக் கொண்டுள்ளது.

1985 ஆம் ஆண்டு அரசாங்கத்திடம் மீன்பிடித்துறை ஒன்றை அமைப்பதற்கான திட்டம் கையளிக்கப்பட்டு, அந்த திட்டம் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டதே தவிர, நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதற்கான காரணமாக யுத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால்தான் இந்தத்திட்டம் கைவிடப்பட்டது.


வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள், கடற்தொழிலாளர் சங்க சமாச பிரதிநிதிகள் ஆகி யோருடன் இந்தத்திட்டம் தொடர்பாக கலந்துரையா டியுள்ளனர். இந்த அடிப்படையில் மீன்பிடித்துறை அவசியம். 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாரிய படகுகளை வைத்து தொழிலில் ஈடுபட்ட இந்தப்பகுதி மக்கள், காலத்திற்கு காலம் நடைபெற்ற யுத்தத்தால் இந்தத் தொழிலில் ஈடுபடமுடியாது பின்தள்ளப்பட்டனர்.


முல்லைத்தீவு பிரதேசத்தில் இவ்வளவு அழிவு ஏற்பட்டதற்கு காரணம் - கடந்த காலத்தில் தீர்மானிக் கப்படாத இடங்களில் கட்டடங்கள் நிறுவப்பட்டதாகும்.

இந்தப்பிரதேசத்தில் ஐஸ்கட்டித் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. அரசாங்க அதிகாரிகளிடம் ஏதோ ஒரு விதத்தில் தங்களுடைய செல்வாக்கைப் பிரயோகித்து இவ்வாறு தொழிற்சாலைகளை அமைத்த னர்.

இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டிருந்த பகுதியை நோக்கி - தொழில் கருதி மக்கள் கள்ளப் பாடு என்ற இடத்தில் வந்து தங்கினார்கள். இந்தக் கள்ளப்பாடு என்ற இடம் கடல் நீரினால் மூழ்கடிக்கப் படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும், அதற்கு அணைகட்டுமாறு முன்னரே அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு இணங்க ஓர் அணைகட்டப்பட்டது, ஆனால் அது இடை நடுவில் கைவிடப்பட்டது. இந்தப்பகுதிக ளில் குடும்பங்கள் பெருகப்பெருக, மக்கள் மீண்டும் மீண்டும் கடற்கரையை நோக்கிப்போக வேண்டிய தேவை ஏற்பட்டது.

இத்தகைய குடியேற்றங்களை ஒருதிட்டமிட்ட முறையில் அமைத்துக் கொள்வதற்குச் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சிக்கவில்லை. அவர்கள் தமது அலுவலகத்திற்குள் இருந்துகொண்டு குடியேற்றக் கட்டமைப்புகளை வகுத்தனரே தவிர, சம்பந்தப்பட்ட இடத்திற்குச் செல்லவில்லை. இத்தகைய அசமந்தச் செயற்பாடுகள் தான் முல்லைத்தீவு பிரதேசத்தில் பெரும் உயிரிழப்புகளும், சொத்தழிவுகளும் ஏற்படுவ தற்கு முக்கிய காரணமாக இருந்தன. வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் கடல் தடுப்பு அணைகள் அமைக் கப்பட்டிருந்தன. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தத்தடுப்பு அணைகள் புனரமைக்கப்பட்டன. கடல் அனர்த்தத்தால் இடம்பெற்ற அழிவுகளை - தமிழர் தாயகத்தின் 90 வீதமான பொருளாதாரத்தை ஏற்படுத்தி, மீன்பிடித்தொழிலை பாதிக்காத வகையில் எந்தவித மான அனர்த்தங்களும் நிகழாது, முன்னெச்சரிக்கை திட்டங்களான கடற்கரைப் பிரதேசத்தில் மரநடுகைத் திட்டங்கள், தடுப்பு அணைகள் போன்ற முன்னெச் சாிக்கைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன், இந்த அனர்த்தத்தால் உளநலம் பாதிக் கப்படாதிருப்பதற்காக சிறுவர்களுக்கான செயற்பாடுக ளை மேற்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.





முல்லைத்தீவு மாவட்டத்தில் அழிவடைந்த பகுதிகளை மீளக்கட்டி யெழுப்புவது தொடர்பான திட்டமிடல் கலந்துரையாடல் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் சிரான் பணிபபாளர் சிரேனியஸ் செல்வின் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், இந்தக் கலந்துரையாடலில் பங்குகொண்ட முக்கிய பிரமுகர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தொற்று நோய்க்கு சிகிச்சை அளிக்க மருதங்கேணி வைத்தியசாலை தெரிவு

(கிளிநொச்சி)

கடல் கொந்தளிப்பால் பாதிப் புக்குள்ளான மக்களில் தொற்று நோய்களுக்குள்ளானவர்களை தனிமைப்படுத்தி, சிகிச்சை அளிப் பதற்கு மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை தெரிவு செய்யப் பட்டுள்ளதாக தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட தாக்கத்தால் பாதிக்கப் பட்டு, இடம்பெயர்ந்த 22 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்கள் இட நெருக்கடியில் வாழும் மக்களுக்குத் தொற்று நோய்கள் பரவக்கூடிய சாத்தியக்கூறு இருப்ப தால், தொற்று நோய்களை இனம் கண்டு உடனடியாக அப்புறப்படுத்த வேண்டிய நிலையுள்ளதால், முகாம் களிலிருந்து தொலைவிலுள்ள மருதங்கேணி வைத்தியசாலையை தெரிவு செய்து, சகல வசதிகளையும் ஏற்படுத்தியிருப்பதாகத் 'தமிழீழ சுகாதாரத் துறையினர் தெரிவித் தனர். (17)

# முல்லைத்தீவில் மீன்பிடிக்க அனுமதிப்பதென தீர்மானம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் மீனவர்களை தொழிலில் ஈடுபடு வதற்கு அனுமதிப்பது என்று நேற்று முன்தினம் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டது.

சுனாமி கடல் கொந்தளிப்பால் அழிவடைந்துள்ள முல்லைத்தீவின் அபிவிருத்தி குறித்த திட்டமிடல் கூட்டம் நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு முல்லைத்தீவில் உள்ள நிகொட் நிறுவன கட்ட டத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கடற் புலிகளின் தளபதி கேணல் சூசை, விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன், யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீட விரிவுரை யாளர் கலாநிதி சூசை ஆனந்தன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், பேரசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் அதிகாரிகள் மீனவர்களும் கலந்து கொண்டனர்.

சுனாமி கடந்கொந்தளிப்பின் பின்னர் மீனவர்கள் கடலில் இறங்கி மீன்பிடிப்பது, அந்த மீன்களை உட்கொள்வதால் ஏற்படும் விளைவு கள் குறித்து விரிவாக ஆராயப்பட் டது. இதன்போது சுனாமியின் தாக்கத்திற்குட்பட்ட கடற்பகுதிக ளில் மீண்பிடிப்பதில் எந்த பாதிப்பும் இல்லை என்றும், பிடிக்கப்படும் மீன் களை உண்பதால் விளைவுகள் ஏற்படாது என்றும் தீர்மானித்த பின்னர் மீன்பிடி உபகரணங்களை வைத்திருந்தவர்கள் தொழிலில் ஈடுபடமுடியும் என்று தெரிவிக் கப்பட்டது.

அத்துடன் கடற்கொந்தளிப்பால் அழிவடைந்துள்ள முல்லைத்தீவு நகரை மீளக்கட்டியெழுப்புவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

## நெற்செய்கை பாதிப்பு

முல்லைத்தீவில் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தின் காரணமாக 582 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட் டுள்ளது. இங்கு கடல் நீர் உட் புகுந்தமையால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் கரைச்சிக் குடியிருப்பில் 150 ஏக்கரும், பூவர சன் வெளியில் 130 ஏக்கரும் பாதிக கப்பட்டுள்ளன.இவை தவிர உப உணவுப் பொருட்களான 35 ஏக்கர் நிலக்கடலையும், 25 ஏக்கர் ஏனைய பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன.



வன்னிப் பதிவுகள்

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜனவரி - 09

1799 :- வருமான வரி அறவிடும் முறை முதன் முதலாக பிரிட்டனில் பிரதமர் வில்லியம் பிட் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

1811 :- பெண்கள் கோல்ப் விளையாட்டு முதன் முதலாக ஸ்கொட் லாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1816 :- நிலக்கரிச் சுரங்கங்களில் பயன்படுத்தப்படும் டேவி பாது காப்பு விளக்கு ஹெப்பன் நிலக்கரிச் சுரங்கத்தில் முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த விளக்கைக் கண்டு பிடித்தவர் சேர் ஹம்ரி டேவி என்பவர்.

1924 :- சேர்.பொன்.அருணாசலம் நினைவுநாள்

1929 :- டொக்டர் அலெக்ஸாண்டர் ஃபிளமிங் முதன் முதலாக பென் சிலின் மூலம் தனது உதவியாளரான ஸ்ருவர்ட் கிரெட்டார என்பவருக்கு சிகிச்சையளித்தார்.

1997 :- ஆனையிறவு, பரந்தன், வவுணதீவு பகுதிகளிலிருந்த படைக யினருக்கு எதிரான தாக்குதல்கள் ஆரம்பித்தநாள் இன்றாகும்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற*
*இடுக்கண் இடுக்கண் படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வரம் கொடுக்க முனையும் சுவாமிகளும் அதைத் தடுக்கத் துடிக்கும் பூசகர்களும்

"சுனாமி" கடற்பேரலை ஏற்படுத்திய அனர்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக, வடக்கு - கிழக்கு கரையோரங்களில் மிக மோசமான அழிவுகளைச் சந்தித்த மக்களுக்கு - வெளிநாடுகளில் இருந்தும், வேறு பொது அமைப்புக்கள் மூலமாகவும், புலம் பெயர்ந்துவாழும் தமிழ் மக்களிடமிருந்தும் வரும் நிவாரண உதவிப் பொருட்களை, அவை யார்மூலம் விநியோகிக்கப்பட வேண்டுமென்று அதனை அனுப்பிவைப்பவர்கள் விரும்புகின்றார்களோ - அவர்களுடாக அந்த விநியோக நடை முறைகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை அரசு தீவிரமாகச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளது.

வடக்கு - கிழக்கு கரையோர மக்களுக்கான நிவாரணப் பணிகளை - அனர்த்தம் நடந்து முடிந்த உடனேயே எந்த அரச கட்டமைப்பும் எந்தவித உதவிகளையும் செய்யாது மௌனம் சாதித்திருந்த வேளையிலேயே, ஆபத்துக்களைப் பொருட்படுத்தாது பாதிப்புக்குள்ளான மக்களுக்குத் தேவையான மீட்பு நடவடிக்கைகளையும், உடன் நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டு - மேலும் ஆபத்துக்கள் ஏற்படாமல் காத்தவர்கள் விடுதலைப் புலிகளேயாவர்.

சுனாமி ஆழிப்பேரலை வடக்கு - கிழக்கைத் தாக்கிய சில நிமிடவேளையிலேயே விடுதலைப் புலிகளின் படையணிகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து சென்று, மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட விதத்தையும் அவர்களின் பொறுப்புணர்வையும் வியந்தும் பாராட்டியும், அமெரிக்காவின் "வொஷிங்டன் ரைம்ஸ்" பத்திரிகை எழுதியுள்ளதுடன், விடுதலைப் புலிகளின் கட்டுக் கோப்பான நிர்வாகக் கட்டமைப்புக்களின் செயற்திறனானது - இவ்வாறான சிரமம் மிக்க பணியினை மிகவும் நேர்த்தியாகவும், நிதானமாகவும், ஒழுங்காகவும் கையாண்டதைப பார்க்கும்போது, அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு முன்னோடியாக அவர்களிடம் ஒரு சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பொன்று இருப்பதனை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளவும் வைத்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது. அதேசமயம் அந்தச சமயத்தில் எதனையும் செய்யும் திராணியற்ற நிலையில் பரிதாபமாக செயலற்று போயிருந்ததனையும் அது விபரிக்கத் தவறவில்லை.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஆரம்பிக்க முன்னரே, அவற்றை யார் செய்வது என்பதில் அரசியல்வாதிகளுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதுடன், மீட்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட சில மணி நேரத்திற்குள்ளேயே ஊழல் குற்றச்சாட்டுக்களும், நிவாரணப் பொருட்களை ஏற்றி வந்த வாகனங்களை தென்பகுதி பேரினவாத காடயர்களும், படைத்தரப்பைச சேர்ந்த சிலரும் கடத்திச் சென்ற செய்திகளையும்கூட குறிப்பிட்ட அந்தப்பத்திரிகை இலங்கை அரசின் நிர்வாகக் கட்டமைப்பின் சீரற்ற - ஜனநாயகத்தன்மையற்ற - செயற்பாட்டை மறைமுகமாகச் சுட்டியும் காட்டியிருந்தது.

நிலைமை இவ்வாறிருக்க வடக்கு மக்களுக்கான மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளில் ஒழுங்கான செயற்பாடுகள் நடந்துவரும இவ்வேளையில் - அவற்றை வேண்டுமென்றே திட்டமிட்டுக்குழப்பும முயற்சியில் அரசு ஈடுபடத்தொடங்கியுள்ளமையானது, தொடர்ந்தும் தமிழ்மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைகளை வேறுவகையில் கையாளத் தொடங்கியுள்ளதோ என்ற சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

அரசினதும், ஜனாதிபதியினதும் பிரதம பங்காளிகளும், தோழர்களுமான ஜே.வி.பியினர் - சுனாமி அனர்த்தங்களின் போது பாதிப்புக்குள்ளான மக்களின் அவலத்தை, தத்தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் குரூர சிந்தனையுடன் செயற்படுவதை வெளிப்படையாகவே காணக்கூடியதாக இருக்கிறது.

மக்கள் கணணீர் சிந்தும் போது அரசியல் லாபம் தேடுகிறது ஜே.வி.பி என்று ஐ.தே.கட்சி விமர்சித்துள்ளமையை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.


கடந்த வியாழன் ஜனாதிபதிதலைமையில் நடைபெற்ற அனர்த்த நிர்வாகச் செயலணிக் கூட்டத்தில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலரான விமல் வீரவன்ச அவர்கள் பாதிப்புற்ற பகுதிகளுக்குச் சர்வதேச சமூகத்திடமிருந்தும், பொது அமைபபுகளிடமிருந்தும் வழங்கப்படும் நிவாரணப் பொருட் கள் நேரடியாக விடுதலைப்புலிகளுக்குச் செல்ல அனுமதிக்கக் கூடாதென்றும், வெளியிடங்களில் இருந்து வரும் நிவாரணப் பொருட்களை - அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம வரும் நிவாரணப் பொதிகளை பரிசோதிக்கும் உரிமை கடற்படைக்கும், விமானப்படைக்கும் வழங்கவேண்டும என்றும் கூறியதற்கு - அரசு ஒப்புதல் அழித்துள்ளமையானது வடக்கு - கிழககில் சுனாமியால பாதிக்கப்பட்ட மக்களுக்கென அனுப்பப்படும் மனிதநேய அமைப்புகளின் உதவிகள் அவர்களை நேரடியாகச் சென்றடைவதைத் தடுக்கும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளோரின் உள்நோக்கத்தையே குறிக்கின்ற தென்றே கூறவேண்டும்.

இதனை ஜனாதிபதியோ, அரசோ, மறுத்தாலும் கூட இதுவே இன்றைய யதார்த்த நிலையாகும் .

இது ஒருபுறமிருக்க, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்கென இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கியநாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கொபி அனான் அவர்கள் வடக்கு - கிழக்கில் சுனாமியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள கரையோரபபிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிடுவதைத் தடுக்க தீவிரமாக அரசதரப்பு சக்திகள் முயல்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதி எழுதப்படும் வரை மேற்படி பகுதிகளுக்கான அவரது விஜயம் குறித்த செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.

எதுவானால் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ்பேசும் மக்களை மனித நேயத்துடன் அணுகும் மனோதர்மம் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு எந்தநிலையிலும் ஏற்படப்போவதில்லை என்பதையே மேற்குறித்த சந்தர்ப்பங்கள் நிரூபித்துள்ளன.

## நாடும் நடப்பும்




## திருகோணமலை மாவட்டத்தில்
# சுனாமியால் பலியானோர் தொகை 1026 ஆக அதிகரித்துள்ளது!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1026 ஆகவும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 337 ஆகவும் உயர்ந்துள்ளது.

உயிரிழந்த 1026 பேரில் 51 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படாமல் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த அனர்தத்தில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை 27,726, 119,658 நபர்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த முகாம்கள் பல மூடப்பட்டுத் தற்போது 51 முகாம்களில் இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதன்படி கிண்ணியாவில் 12 முகாம்களில் 2924 குடும்பங்களைச்சேர்ந்த 12,107 பேரும், குச்சவெளியில் 12 முகாம்களில் 2342 குடும்பங்களைச்சேர்த 9163 பேரும், வெருகல் பிரதேசத்தில் 4 முகாம்களில் 1445 குடும்பங்களைச்சேர்ந்த 6621 பேரும், பட்டணமும் சூழலும் பிரதேசத்தில் 19 முகாம்களில் 5314 குடும்பங்களைச்சேர்ந்த 20,184 பேரும், மூதூரில் 11 முகாம்களில் 2455 குடும்பங்களைச் சேர்ந்த 10012 பேரும், கோமரன்கடவெலவில் 2 முகாம்களில் 169 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேரும், பதவிசிறிபுரவில் ஒரு முகாமில் 216 குடும்பங்களைச் சேர்ந்த 476 பேரும், சேருவிலவில் ஒரு முகாமில் 165 குடும்பங்களைச் சேர்ந்த 672 பேரும், தம்பலகாமத்தில் 2 முகாம்களில் 124 குடும்பங்களைச் சேர்ந்த 441 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான முகாம்களில் இராணுவத்தினர் சென்று பொறுப்பெடுக்க முனைந்தமை காரணமாக, அங்கிருந்த மக்கள அச்சத்தின் காரணமாகத் தமது உறவினர்கள், நண்பர்களது வீடுகளுக்குச் சென்று தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நலன்புரி நிலையங்களில் பொலிஸார் பாதுகாப்பு!

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டோர் தங்கவைக்கபட்டிருக்கும் நலன்புரி நிலையங்களில் ஆயுதங்களின்றிப் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவது என்று, நேற்று முன்தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

இந்தச் சந்திப்பில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட கடற்தொழில் சங்கங்களின் சம்மேளனம் ஆகியவற்றின் மாவட்ட மேலாளரும் - மக்கள் தொடர்பாளருமான மோகன், வடமராட்சி கடற்தொழிலாளர் சங்கச் சமாசத் தலைவர் செழியன், யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் தவரட்ணம், வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முகாமையாளர் க.சூரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் நலன்புரி நிலையங்களின் பாதுகாப்பை ஜனாதிபதி சந்திரிகா முப்படைகளிடமும் ஒப்படைத்ததை அடுத்து, நலன்புரி நிலையங்களில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது தொடர்பாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இதேவேளை பொதுமக்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலாகும் என்றும், இராணுவத்தை நலன்புரி நிலையங்களில் நிறுத்துவதை அனுமதிக்க முடியாது என்றும், இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

அரசாங்க அதிகாரிகளின் நிர்வாகக் கட்டமைப்புடன், நலன்புரிநிலையங்கள் இயங்கி வருகின்றன என்றும், இராணுவத்தினர் உதவி செய்வதற்கு விரும்பினால் உதவிப் பொருட்களை அரச அதிகாரிகளிடம் ஒப்படைத்து அவர்களினூடாக வழங்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு வேலைகளுக்கு வாகனங்களின் தேவை இருப்பதால் இராணுவத்தினரின் கனரக வாகனங்களைப் பாவனைக்குத் தந்தால் அதைப் பயன்படுத்த முடியும் என்றும், விடுக்கப்பட்ட கோரிக்கைகளை இராணுவத்தரப்பு ஏற்றுக்கொண்டதுடன் பயன்படுத்தப்படும் பிரதேசங்கள், தேவைப்படும் வாகனங்கள் பற்றிய பட்டியலைத் தம்மிடம் ஒப்படைக்குமாறும் இராணுவத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களில் பாதுகாப்புக் கடமையில் பொலிஸாரை ஈடுபடுத்துவதற்குப் பொலிஸ்தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பொலிஸார், ஆயுதங்களின்றி நலன்புரி நிலையங்களுக்கு வெளியே பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதைப் பொலிஸ்தரப்பு ஏற்றுக்கொண்டதை அடுத்து, நேற்றுமுன்தினம் முதல் நலன்புரி நிலையங்களில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடடுவருகின்றனர்.

## சமாதான செயற்பாடுகள் முறிவடைந்தால் நிவாரண உதவிகள் நிறுத்தப்படும்
### ஐ.நா. எச்சரிக்கை

இலங்கை உட்பட விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்று வரும் மூன்று நாடுகளில் சமாதான செயற்பாடுகள் முறிவடைந்தால், அந்த நாடுகளுக்கு சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வழங்கப்படும் நிவாரணங்களை நிறுத்த நேரிடும் என, ஐ.நா அமைப்பு எச்சரித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை, இந்தோனேஷியா, சோமாலியா ஆகிய மூன்று நாடுகளுக்குமே ஐ.நாஅமைப்பால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரைநிகழ்த்திய ஐ.நா அமைப்பின் திடீர் உதவிகளுக்கான தொடர்பாளர் ஜயன் ஹெக்லன்ட் -

குறிப்பிட்ட இந்த மூன்று நாடுகளும் மோதல்களைக் கைவிட்டு விட்டுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதில் ஒன்றிணைய வேண்டும் எனக் கோரினார்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமையன்று இந்தோனேஷியாவில் நடைபெற்ற சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்குவது தொடர்பாக இடம்பெற்ற மாநாட்டில் உரையாற்றிய கொபி அனான் - கடந்த 26ஆம் திகதியன்று இடம்பெற்ற சுனாமி அனர்த்தம் ஐ.நா அமைப்பின் வரலாற்றில உலக சமூகம் சந்தித்த மிகப்பெரிய இயற்கை அனர்த்தம் எனக் குறிப்பிட்டார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்கள் நிவாரண உதவியின்றிப் பெருஞ்சிரமம்

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தால பாதிக்கப்பட்ட சுழிபுரம், மாதகல், காரைநகர், சேந்தாங்குளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான கடற தொழிலாளர்கள் அரசின் எந்தவித நிவாரண உதவிகளும் கிடைககாமல் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த அனர்த்தம் ஏற்பட்டு இன்றுடன் 15 நாட்கள் முடிவடைந்தும்கூட, அரசின் எந்தவிதமான நிவாரண உதவியும் இந்த மக்களுக்குக் கிடைக்கவில்லை.

இந்தப் பகுதிகளில் பெரும்பாலான கடற்தொழிலாளர்கள் தமது வீடுகள், மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றையும், ஏனைய உடைமைகளையும் இழந்து, பெரும் வாழ்வியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

சங்கானை பிரதேச செயலரிடமும் இதுபற்றி முறையிட்டும் இன்றுவரை எந்தவிதமான உதவிகளும் கிடைக்கவில்லை.

அரசாங்கம் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டுத தமக்கான அத்தியாவசிய உதவிகளைச் செய்யவேண்டும் என அந்தப் பகுதிக் கடற்தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (207)

# IDM

The Nation's ICT Academy

# IDM(PVT)LTD

## Authorized ICT Education

## Jaffna Centre

GIT

Be brave and try new things

"2004ஆம் ஆண்டு O/L பரீட்சை தோற்றிய மாணவர்களுக்கும், கணனித்துறை ஆர்வலர்களுக்கும்"

## மாபெரும் இலவசக் கணனிக் கருத்தரங்கு

சர்வதேச தரம் வாய்ந்த கற்கை நெறிகளை யாழ்மண்ணில் தொடரும் சந்தர்ப்பத்தை வழங்கும் முகமாக நடைபெறும் இந்த மாபெரும் கருத்தரங்கில் அனைவரும் திரண்டு வந்து உங்களது கணனித்துறை சார்ந்த விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவும்

**காலம்: 09-01-2005 காலை 10.00**

**இடம்: நாவலர் கலாசார மண்டபம், யாழ்ப்பாணம்.**

சர்வதேச தரம் வாய்ந்த எமது நிறுவனம் யாழ்மண்ணில் கால்பதித்து 3 மாத காலப்பகுதியினுள் பல்வேறுபட்ட கற்கை நெறிகளை யாழ்மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தி அதில் மாபெரும் வெற்றியைக் கண்டுள்ளது. இரண்டாம் கட்டமாக மீண்டும் பல்வேறு வகையான சர்வதேச தரக்கற்கை நெறிகள் உங்களுக்காக அறிமுகப்படுத்துகின்றது.

NCC education





**Metro politan University - UK** பல்கலைக் கழகத்தின் **NCC ( B.Sc,M.Sc )** பட்டப்படிப்பினை தற்பொழுது யாழ்மண்ணில் தொடரும் வாய்ப்பு.

**1st Year will be started on January 15th**

**Registration should be made before 13th of January**

**Regfee: 10,000/=**

**Course fee: Reg + 36000/=**

**!! சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழினைப் பெறக்கூடிய வாய்ப்பு !!**

2004ம் ஆண்டு O/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான விசேட கணனிக் கற்கை நெறியொன்றினை எமது நிறுவனம் யாழ் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது

**50%** Discount Fees 8500/= Only ("Payable in Installments")

Duration 3months only

## Beginners Diploma in ICT

## (BDIP.ICT)

*"This is a Specially Designed Programme for O/L Students"*

இக் கற்கை நெறி தொடர்பான இலவச கருத்தரங்கு இன்று (09.01.05) காலை 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து மாணவர்களும் பங்குபற்றி மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும்

## இக் கற்கை நெறியினைக் கற்பதன் மூலம்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலகுவில் வேலைவாய்ப்பினைப் பெறக்கூடிய வசதி

தொடர்ந்து பட்டப்படிப்பினைக் கற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட கற்கை நெறி

**உங்கள் அனுமதிகளை 11ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவும்**

**451,k.k.s Road Jaffna** **T.P:021-4591398**

(C/2702)

# ஆஞ்சநேய ஜெயந்தி விழா

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று ஆஞ்சநேய ஜெயந்தி விழா நடைபெறவுள்ளது.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் கடந்த 31 ஆம் திகதி முதல் ஆஞ்சநேயப் பெருமாளுக்கு 10 நாட்களாக அபிஷேகம், பூஜை, பஜனை என்பன நடைபெற்று வருகின்றது.

அதன் இறுதிநாளான இன்று ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமாளின் ஜெயந்தி விழா நடைபெறவுள்ளது. இதில் 108 சங்காபிஷேகம், பூஜை மற்றும் உற்சவம் ஆகியவையும் நிகழவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (207)

## விசேட மாநாடு

"நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள்" என்னும் பொருளில் யெகோவாவின் சாட்சிகளின் விசேஷ மாநாடு இன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிகள் காலை 9.40 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 மணிக்கு நிறைவு பெறும். பிற்பகல் 2.55 மணிக்கு "கடவுளுடைய அறிவுரைக்கு தொடர்ந்து கவனம் செலுத்துங்கள்" எனும் பொருளில் பகிரங்க சொற்பொழிவு ஒன்றும் இடம்பெறவுள்ளது.

# சலன சித்திரம் அமைப்பின் நிர்வாகிகளுக்கான கூட்டம்!

(யாழ்ப்பாணம்)

சலன சித்திரம் அமைப்பின் யாழ். மாவடட நிர்வாகிகளுக்கான அவசர கூட்டம் கரவெட்டியிலுள்ள அமைப்பின் செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அமைப்பின் ஸ்தாபகர் க.தேவதாஸன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கலாசாரத்தை நோக்கி இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை யாழ். மாவட்டத்திலும் செயற்படுத்தும் வழிவகை பற்றி இங்கு ஆராயப்படவுள்ளது.

குறிப்பாக, யாழ். மாவட்ட செயலகம் மற்றும் அனைத்துப் பிரதேச செயலகங்கள் ஊடாக அரச அங்கீகாரத்துடன் திரைப்படச் சங்கங்களை நிறுவி இயக்குவது பற்றியும் குறைந்தளவு இருக்கைகள் கொண்ட சினிமா திரையரங்குகளை கிராமங்கள் தோறும் உருவாக்குவது பற்றியும் ஆராயப்படவுள்ளது.

# அனைத்து தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசத்திற்குட்பட்ட சகல தனியார் கல்வி நிறுவனங்களின் மற்றும் பிரத்தியேக வகுப்புகளின் இயக்குனர்கள், ஆசிரியர்களுக்கான அவசர ஒன்றுகூடல் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் முக்கிய உறுப்பினர்களும், தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளரும், தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளரும், தமிழர் ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளரும் கலந்துகொள்ளவுள்ளதால் அன்றைய தினம் மாலை நேர வகுப்புக்கள் அனைத்தையும் நிறுத்தி இயக்குனர்களும், ஆசிரியர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நிறுவனம் சார்ந்த ஆசிரியர்களும் (தங்களால் ஏற்கனவே பூரணப்படுத்தப்பட்ட பட்டியற்படி) தவறாது கலந்து கொள்ளுமாறும் வருகைதரும் தாங்களும் ஆசியரியர்களும் தங்களுக்கு ஆனுப்பப்பட்ட பட்டியலைப் பூரணப்படுத்திக் கொண்டு வருமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் யாழ். நல்லூர் கோட்டம் அறிவித்துள்ளது.

# கல்வி அமைச்சு அதிகாரிகள் வடமராட்சிக்கு விஜயம்!

மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகள் மற்றும் மத்திய கல்வி அமைச்சு அதிகாரிகள் சுனாமி பேரழிவினால் வடமராட்சியில் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

நேற்று மாகாணக் கல்வி அமைசசின் செயலாளர் இரா.தியாகராசா மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் தில்லைநடராசா ஆகியோர் மற்றும் அதிகாரிகள் வடமராட்சி கிழக்கு, வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (122)

# கரவெட்டி பிரதேச கிராம அலுவலர்களுக்கு!

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்கல் மற்றும் தொழில்களை இழந்தவர்கள் பற்றிய விபரங்களைப் பெறுவதுடன் அவர்களுக்கான உதவிகள் குறித்தும் இநதக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத்துக்கு அனைத்து கிராம அலுவலர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

# அம்பிகை முன்பள்ளி மாணவரின் கலைவிழா

(கோண்டாவில்)

கோண்டாவில் அம்பிகை முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய கலைக் கூடத்தில் முன்பள்ளி ஆசிரியை திருமதி மு.விமலாம்பிகை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.கமலா.சுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் - எஸ்.சண்முககுமார், யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர், எஸ்.ஜெயராஜ், யாழ் மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீஸன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் மலர் - சின்னையா, நல்லூர் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. வி.மாலதிதேவி, கிராம சேவையாளர் வ.சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்வுகளாக கலைமன்ற யாழ் கிளை நிறுவனத்தின் விக்னா நாட்டியப்பள்ளி மாணவர்களின் நாட்டிய நிகழ்வுகளும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. (82)

## ஆன்மீகச் சொற்பொழிவு!

(பருத்தித்துறை)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் கலை நிகழ்வுகளின் தொடர்ச்சியாக இன்று காலை 10.30 மணியளவில் 'அருளுரை' என்னும் விடயம் பற்றி நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி சொற்பொழிவாற்றவுள்ளார். (14)

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# யாழ்ப்பாணப் பகுதியில் .....

வலிகாமம்

| | | |
|---|---|---|
| சுஜிதா சந்திரசேகரம் | - | சுன்னாகம் |
| சுகந்தா செந்தூரன் | - | மல்லாகம் |
| சுகந்தினி பேரம்பலம் | - | ஏழாலை |
| சுகந்தினி செல்வரத்தினம் | - | பன்னாலை |
| சுபந்தினி பரம்சோதி | - | காங்கேசன்துறை |
| சாந்தினி வாமதேவன் | - | சுழிபுரம் |
| சுதாஜினி நடராசா | - | மானிப்பாய் |
| சுபோதினி சுப்பிரமணியம் | - | பன்னாலை |
| சுரேஸ்குமார் பிறேமலோஜி | - | சங்கானை |
| சின்னராசா அனுஷியா | - | தெல்லிப்பளை |
| சிந்தியா கிறிஸ்ரி | - | யாழ்ப்பாணம் |
| சித்திராங்கி நவரட்ணம் | - | மானிப்பாய் |
| சிவந்தி சிவநாயகம் | - | சுழிபுரம் |
| சிவகாந்தினி சிவலிங்கம் | - | சுன்னாகம் |
| சிவகுமார் தயாவாணி | - | தெல்லிப்பளை |
| சிவாஜினி சிவ்லிங்கம் | - | ஏழாலை |
| சிவதர்சிகா இராஜதுரை | - | நீர்வேலி |
| சிவயோகவதனி லோகேஸ்வரன் | - | ஏழாலை |
| சுசீலா கந்தசாமி | - | மல்லாகம் |
| வனிதகுமாரி சீவரட்ணம் | - | வசாவிளான் |
| வனிதா நவரத்தினராஜா | - | நவாலி |
| விஜயகலா தனபாலசிங்கம் | - | உரும்பிராய் |
| விஜயவாணி ஜெயதேவன் | - | மானிப்பாய் |
| விஜயலதா வேணாட் ரமேஸ் | - | சுன்னாகம் |
| விகர்சினி பாலநாதன் | - | நவாலி |
| வசந்தகௌரி புஸ்பலிங்கம் | - | சண்டிலிப்பாய் |
| வரகனி விஜயபாலன் | - | சுழிபுரம் |
| வல்லிபுரம் சுதர்சினி | - | அச்சுவேலி |
| இரஞ்சிதமலர் கிருஸ்ணசாமி | - | சுன்னாகம் |

(முற்றும்)

(நான்காம் பக்கத் தொடர்ச்சி)

# வன்னிப் பகுதியில் .....

| | |
|---|---|
| மரியா இடுக்கியா பிறிட்ஜித் சவரிமுத்து | - மாதகல் |
| அன்பரசி தர்மலிங்கம் | - வவுனிக்குளம் |
| அன்ரனிற்றா சுபாஜினி ஜெயராசா | - வல்வெட்டித்துறை |
| அனுராதா சிதம்பரநாதன் | - நல்லூர் |
| விஜயகுமாரி தில்லைவிநாயகம் | - தெல்லிப்பளை |
| கோபாலகிருஸ்ணன் கிருஸ்ணராணி | - சாவகச்சேரி |
| கேதீஸ்வரி கணபதிப்பிள்ளை | - நீராவியடி |
| சஜீதா கிருஸ்ணபிள்ளை | - மந்துவில் |
| சுப்பிரமணியம் சுகந்தினி | - முள்ளியவளை |
| சபாபதி சர்மிலா | - கொழும்புத்துறை |
| சாந்தலிங்கம் பாமினி | - யாழ்ப்பாணம் |
| சுலோஜினி சிறிதரன் | - சங்கானை |
| சிவகுமாரன் தியாகவதனி | - அரியாலை |
| சங்கரப்பிள்ளை உதயகுமாரி | - ஒட்டுசுட்டான் |
| சசிரஜனி புலேந்திரன் | - சுன்னாகம் |
| வஜினா சண்முகநாதன் | - சாவகச்சேரி |
| விநோதா மகாதேவன் | - தெல்லிப்பளை |
| ரஜனி ரட்ணம் | - வவுனிக்குளம் |
| கணேசபிள்ளை விஜயரூபி | - காரைநகர் |

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை பாலசிங்கம் (பாலம்மான்)

பருத்தித்துறை இன்பர்சிட்டியைச் சேர்ந்த செல்லத்துரை பாலசிங்கம் (பாலம்மான்) (இன்பருட்டி முன்னாள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க உபதலைவர்) கடந்த 6.1.2005 அன்று காலமாகி விட்டார்.

அன்னார், செல்லத்துரை, காலஞ்சென்ற தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், யோகமலரின் அன்புக் கணவரும், நவநீதன் (இந்தியா), நவசீலன் (லண்டன்), ஜானகி, கமலினி, ராஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வடிவாம்பிகை, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவராசா (முன்னாள் மிருகவைத்தியர்), சாரதாம்பிகை ஆகியோரின மைத்துனரும், சிவசுப்பிரமணியம வனிதாமலர் (பிரான்ஸ்), ஞானச்சந்திரன் இந்திரா காந்தி (பிரான்ஸ்), தவமனோகரன் (கனடா), வசீகரன் (நோர்வே), தெய்வீகரன் (சுவிஸ்), மதிவதனி (இந்தியா), ஆகியோரின் மாமனாரும், நிவேதா (இந்தியா) வின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள், 10.01.2005 திங்கட்கிழமை (நாளை) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இன்பருட்டி,
பருத்தித்துறை.
T.P - 077 - 6136537

C/3764

தகவல்:-
க.சிவராசா
(மைத்துனர்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
* * *
04
*
07
*
1923



உதிர்வு
* * *
11
*
12
*
2004

## அமரர் சுப்பிரமணியம்-சின்னாச்சிப்பிள்ளை

அன்புடனே எம்மை அரவணைத்த தெய்வமே!
இன்பமுடன் வாழ்ந்த நாட்களையே எண்ணுகிறோம்
எண்ணி முடியவில்லை, ஏக்கமின்னும் தீரவில்லை
விண்ணுலகம் சென்றதை நீயெண்ணி.....

ஆண்ட தோட்டம்,
அல்வாய் மேற்கு,
திக்கம்.

குடும்பத்தினர்.

(1026)


# COMBINED MATHS 2007

இணைந்த கணிதம்- T1 முதலாம் தவணைச் செயல்நூல் வெளிவந்துவிட்டது.

ஆசிரியர்: சி.துரையப்பா, BSc (Maths Sp.), PGD (Statistics), MSc (Agric.) (Jaffna College ஆசிரியர்)

(1021)

ராஜா யாழ்ப்பாணம்.

விஜய், சினேகா, வடிவேலு நடித்த

வசீகரா

(ரீல்ஸ்)

புதிய நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, நடித்த

ஜெய் சூர்யா

கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)

பொங்கல் வெளியீடாக தனுஷின்

தேவதையைக் கண்டேன்

நாதன்ஸ் யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)

குதூகல ஆரம்பம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இலங்கை மண் தாவடியின் மைந்தன்ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடித்த



ராமகிருஷ்ணா

காட்சி நேரம் - 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், த்ரிஷா நடித்த

சாமி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

AIRFORCE I

மணப்பெண் அலங்காரம்

சைவ, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரங்கள் வீடுகளில் வந்து செய்து கொடுக்கப்படும்.

தொடர்பிற்கு: வேணி

மே/பா. கனகேஸ்வரி
(ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை)
"பழவளவு"
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.



(1025)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமையல் பாத்திரங்கள் வாங்க 2 500 ரூபா கொடுப்பனவு!



(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமையல் பாத்திரங்களை வழங்குவதற்காக 2 ஆயிரத்து 500 ரூபாவை வழங்கவும் - சமையலுக்குத் தேவையான வெங்காயம், மிளகாய் போன்றவற்றை கிராம அலுவலரூடாக வழங்குவதெனவும், யாழ். செயலக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது தொடர்பாக கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் தொடர்ச்சி, நேற்று மாலை 4 மணியளவில் யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், மின்சாரசபை பிராந்திய பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர், மேலதிக கல்விப் பணிப்பாளர், அரச செயலக உயர் அதிகாரிகள், கடற்தொழில் சமாசத் தலைவர், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன் மற்றும் இராணுவ பொலிஸ் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன :

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சீரான முறையில் உணவு விநியோகம் நடைபெற்றுள்ளதா?

நலன்புரி நிலையங்களுக்கு வெளியே உறவினர் வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கு கடந்த 28 ஆம் திகதிக்குப் பின்னர் உணவுப் பொருட்கள் விநியோகம் குறிப்பாக பருத்தித்துறை போன்ற இடங்களில் சீரான முறையில் வழங்கப்படவில்லை என்றும் இவற்றை உடனடியாக வழங்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் தற்போது அரிசி, மா, சீனி போன்றவற்றையே வழங்கி வருகின்றது. ஆனால், இந்த மக்கள் சமைத்துச் சாப்பிடும் வகையிலான மிளகாய் வெங்காயம் போன்ற பொருட்கள் வழங்கப்படவில்லை. எனவே, இவற்றை இன்றுமுதல் கிராம சேவையாளர்கள் வாங்கிக் கொடுக்கும் போது, அவற்றுக்குப் பிரதேச செயலாளர்கள் நிதி வழங்குவர் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கு உலருணவைத் தொடர்ந்து வழங்கவும் முடிவெடுக்கப்பட்டது.

அனைத்துப் பாடசாலைகளும் 10 ஆம் திகதி ஆரம்பமாகுமாக இருந்தால் - அனேகமான பாடசாலைகளில் தங்கியுள்ள மக்கள் உடனடியாக வெளியேறி தற்காலிகமாக நலன்புரி நிலையங்களுக்குச் செல்ல இயலாது. எனவே 10 ஆம் திகதி பாடசாலைகள் திறப்பது சாத்தியமில்லை. எனவே, பாடசாலைகளில் உள்ள மக்கள் தற்காலிக முகாம்களுக்குச் சென்ற பின்பே பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். எனவே பாடசாலைகளில் உள்ள மக்களை விரைவாக தற்காலிக முகாம்களுக்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அழிவடைந்த மற்றும் பகுதியாகச் சேதமடைந்த பாடசாலைகளைத் திருத்தியமைக்க நிதி வழங்குதல் வேண்டும். அழிவுற்ற பாடசாலைகளைத் திருத்தியமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளை, அங்கு செல்ல முடியாத மாணவர்களை அருகிலுள்ள பாடசாலைகளில் இணைத்து காலை, மாலை வேளைகளில் கல்வி கற்பித்தல் வேண்டும்.

சுகாதாரம், நீர் விநியோகம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுத்தல்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் வள்ளங்களை மீட்பதற்கும், உயிரிழந்த மீனவர்களின் தொகை, மற்றும் காணாமற்போயுள்ளவர்களின் விபரங்களை சேகரித்து அடுத்து மூன்று தினங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என - பிரதேச செயலர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தற்காலிக முகாம்கள் அமைக்கப்படும்போது, கடற்கரைக்கு அண்மையாக இல்லாமல் அதே நேரம் தொலைவாகவும் இல்லாமல் பாதுகாப்பான இடங்களில் அமைத்தல்.

பாதிக்கப்பட்ட சில பிரதேசங்களில் அரச ஊழியர்கள், பிரதேச செயலர்கள் அனைவரும் செயலணிக் குழுககளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

இந்த மக்களுக்கு சமையல் பாத்திரங்களை வழங்குவதற்காக ஒரு குடும்பத்துக்கு 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் இன்று முதல் வழங்கப்படும்.

பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பாக சரியான தகவலைப் பெறல்.

தற்போது ஒருவருக்கு ஒரு வாரத்துக்கு 370 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களே வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, இது அவர்களுக்குப் போதாத காரணத்தால், தற்போதைய நிலைமையை மதிப்பீடு செய்து அவற்றை உயர்த்தவேண்டும் என, அரசாங்கத்தைக் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## பட்டதாரிப் பயிலுனர்களின் ஆசிரிய நியமனக்கடிதங்கள் வலயக்கல்விப் பணிமனைகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் பெற்ற பட்டதாரி பயிலுனர்கள் நாளை காலை 10 மணிக்கு நியமனம் பெற்ற கல்வி வலயங்களுக்குச் சென்று நியமனக் கடிதங்களை பெற்று அன்றைய தினமே கடமைகளைப் பொறுப்பேற்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தவிர்ந்த வட - கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற யாழ். மாவட்டப் பட்டதாரிகள் தமது நியமனக் கடிதங்களை இன்று காலை 9 மணிமுதல் 12 மணிவரை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களின் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றவர்களும் நாளைய தினமே அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளுக்குச் செல்லுமாறு வட - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்தார்.

## விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு தளத்துக்கு பெரும் சேதம் ஏதுமில்லை!

### நேரில் பார்த்த பி.பி.சி. செய்தியாளர் விபரிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவிலுள்ள கடற்புலிகளின் பிரதான தளத்துக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாக அரசாங்கம் பிரசாரம் செய்தது. ஆனால், அந்தத் தளத்திற்குப் பெரும் பாதிப்பு ஏதும் ஏற்பட்டதற்கான எந்தத் தடயத்தையும் காண முடியவில்லை என அங்கு விஜயம் செய்த பி.பிசி செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிஷன் தெரிவித்தார்.

முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த பி.பி.சி செய்தியாளர் இது குறித்து விபரிக்கையில -

விடுதலைப் புலிகள் அமைப்பின் 5000 போராளிகளும் முக்கிய கடற்படைத்தளமும், சுனாமிப் பேரலையால் அடித்துச் செல்லப்பட்டதாக இலங்கை அரசாங்கத்தின் ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் முற்றிலும் தவறானவை என தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படைத் தளபதி சூசை தெரிவித்தார்.

புலிகள் அமைப்பின் தலைவர் மற்றும் உளவுப்பிரிவின் தலைவர் ஆகியோர் சுனாமிப்பேரலையால் கொல்லப்பட்டதாக இலங்கை அரசாங்க ஊடகங்கள் தெரிவித்த கருத்துக்கள் ஒரு பொய்ப்பிரசாரம்.

பாதுகாப்பு காரணங்களுக்காக தளத்தின் முழுப்பகுதியும் காண்பிக்கப்படவில்லை. அங்கு புகைப் படங்கள் பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அங்கு இரண்டு பெரிய பீரங்கிப் படகுகளைப் பார்வையிட்டேன்.

அந்தப் பீரங்கிப்படகுகளில் நான்கு மோட்டார்கள் பொருத்தப்பட்டிருந்தன. அத்துடன், மேலும் மூன்று பீரங்கிப் படகுகளையும் நான் கண்டேன் அவை சேதமடையவில்லை.

கடற்புலிகளின் தளம் கடற்கரையில் இருந்து ஒரு கிலோமீற்றருக்கு அதிகமான தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கடற்கரை ஓரத்தின் காட்டுப்பகுதியில் மறைவாக நன்றாக அமைக்கப்பட்டிருந்தது.

தமது முகாமுக்குள் நீர் வந்ததாக கடற்புலிகள் தெரிவித்தார்கள். அதற்குச் சான்றாக சில சகதிகள் உள்ளன. ஆனாலும், அங்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டதற்கான சமிக்ஞைகள் காணப்படவில்லை.

புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த ஆறு போராளிகள் கொல்லப்பட்டார்கள் என்று கடற்புலிகள் கூறினார்கள்.

ஆனால், இலங்கை அரசு கூறுவது போல் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். என்பதை அவர்கள் மறுப்பதாகவும் பிரான்ஸிஸ் ஹரிசன் மேலும் தெரிவித்தார்.

கடற்புலிகளின் இந்தக் கடற்படைத் தளத்திற்குச் சென்ற முதல் செய்தியாளர் பிரான்ஸிஸ் ஹரிசன் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொபி அனான்..

அங்கு தங்கியுள்ள 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை சந்தித்து ஆறுதல் கூறியதுடன் அவர்களுடனும் உரையாடினார்.

இந்த நலன்புரி நிலையத்தில் ஏறத்தாழ 25 நிமிடங்கள் செலவிட்ட ஐ.நா.செயலாளர் இங்கிருந்து மாலை 4.20 மணியளவில் மீண்டும் ஹெலிமூலம் கொழும்பு திரும்பினார். (10)

## அரசாங்கத் தரப்பின்...

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொபி அனான் செல்வது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகொண்ட போதும் அரசிடமிருந்து எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லையென ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொபி அனான் செல்லவிருந்த இடங்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரலில் விடுதலைப் புலிகளின் பிரதேசங்கள் இடம்பெறாததையிட்டு தாம் தனிப்பட்ட ரீதியில் கவலையடைவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொபி அனான் விஜயம் செய்தமை தொடர்பாக பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அரச அதிகாரி தெரிவிக்கையில் -

அனானின் இந்த இலங்கை விஜயமானது உதவிப் பொருட்கள் சம்பந்தப்பட்டது. அரசியல் ரீதியானதல்ல. ஐ.நா. செயலர் கொபி அனானுக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி அழிவுகளைப் பார்வையிடச் செல்வதற்கு விருப்பமிருந்த போதிலும் அது நடைபெறவில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை கொபி அனானுக்கு ஜனாதிபதி சந்திரிகா, இரவு போசன விருந்து வழங்கிக் கௌரவித்தார். இன்று காலை ஜனாதிபதி சந்திரிகாவை அனான் உத்தியோகபூர்வமாகச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. அலுவலகத்தின்...

பாக இருந்தது.

அதேவேளை கொபிஅனான் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்து பேசுவதன் ஊடாக தடைப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடங்க வாய்ப்பு ஏற்படும் என நம்பினர்.

ஐ.நாவின் செயலாளர் நாயகம் திருகோணமலை சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டதை நாம் வரவேற்கின்றோம். அதேபோன்று முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்து உண்மை நிலையை அறியவேண்டும்.

ஐ.நாவின் செயலாளர் நாயகம் வடக்கே விஜயம் செய்யவேண்டும் என்ற தமிழ் மக்களின் நியாயபூர்வமான வேண்டுதலை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக இன்று காலை 11.00 மணிக்கு கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்திற்கான ஐ.நாவின் அலுவலகம் முன்பாக அமைதி வழியிலான கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை யாழ்ப்பாண மாவட்ட பொதுஅமைப்புகளின் ஒன்றியமும், யாழ்ப்பாணமாவட்ட மனிதநேய அமைப்புக்கள் ஒன்றியமும் இணைந்து மேற்கொள்ள உள்ளன. இப்போராட்டத்தில் மனித நேய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் நன்றிகள்
DMI
Jaffna
- நிர்வாகம்

## தென்கிழக்கு கடலில் தாழமுக்கம்

(கொழும்பு)

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் தாழமுக்கம் ஒன்று உருவாகியிருப்பதாகவும் இதனால் வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்படும் என்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பலமான காற்று வீசக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் மத்திய தென்மாகாணங்களில் உள்ள சில பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம்.

சில இடங்களில் பலத்த மழை பெய்யக்கூடும். கிழக்கு, தெற்குக் கரையோரங்களில் கடல் ஓரளவுக்கு கொந்தளிப்பாகக் காணப்படும் என்று அவதான நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## விசமத்தனமான..

பணியில் அரசின் பொறுப்பு வாய்ந்த ஊடகமொன்று ஈடுபடுவது வருந்தத்தக்கது.

ஏற்பட்டிருக்கும் துன்பியல் நிகழ்வால் மக்கள் பரிதாபநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் சூழ்நிலையிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதாபிமான நடவடிக்கைகளின் பின்னணியிலும் செய்தி வெளியிடுவதில் உண்மைத்தன்மை மாத்திரமன்றி கவனம், கட்டுப்பாடு மற்றும் உடகத் தர்மம் என்பவற்றைப் பேணுவது அவசியமானது.

ஒரு தேசிய அனர்த்தத்தின் காரணமாக மக்கள் அவலநிலையில் இருக்கும் பொழுது அவர்கள் மத்தியில் பதற்றமும் குழப்பமும் ஏற்படாதிருப்பதை உறுதி செய்யும் தார்மீகக் கடப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு. வதந்திகளைப் பரப்புவதற்கும் விசமத்தனமாக பிரசாரங்களை மேற்கொள்வதற்குமான நேரம் இதுவல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.